SET **M**

Question Paper Booklet Sl. No.	

K-TET - AUGUST 2012

Roll No. | | | | | | |

Category - II	**Part - 2**

Question Code	Area/Subjects	No. of Questions	Sl.No. of Questions	Sl. No. of Pages
603	Tamil	**30**	**91** to **120**	**3** to **7**

Space for Rough Work - Page No. : **2.**

INSTRUCTIONS :

Candidates are advised to read the following instructions very carefully.

Non-compliance of any of these may result in cancellation of the OMR Answer Sheet.

1. Don't open the Question Booklet seal before time. **Before attempting the papers, the candidates should make sure that no page or question is missing from the Question Paper.** In case there is any discrepancy, it should be immediately reported to the invigilator incharge for obtaining a complete Question Paper.
2. Candidates should occupy only the allocated seat at the venue of the allotted centre as per seating plan.
3. **Use only Blue/Black Ball Point Pen for answering objective (multiple choice) questions on OMR Answer Sheet.**
4. No identification mark, other than where asked for, on the OMR Answer Sheet, is permitted. If done so, the OMR Answer Sheet is liable to be treated as cancelled. The decision of the Secretary, Pareeksha Bhavan in this regard shall be final.
5. If at any stage OMR Answer Sheet of a candidate shows or it is otherwise established that he/she has received or attempted to receive help from any source in any manner or has given help or attempted to give help to other candidate in any manner, the relevant OMR Answer Sheet and his/her candidature for K-TET - 2012 will be cancelled. The decision of the Secretary, Pareeksha Bhavan in this regard shall be final.

Rough Work

CATEGORY - II

PART - 2

Tamil - Question Numbers 91 to 120

இலக்கியப் பரிணாமத்தின் உச்சமாகத் தற்கால இலக்கியம் திகழ்கிறது. விடுதலைக்கு முன்பும், விடுதலைக்குப் பின்பும் தமிழ்ச் சமூகச் சூழலில் ஏற்பட்ட மாறுதல்களை உள்வாங்கிக் கொண்டதால் தற்கால இலக் கியங்கள் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதுமை கொண்டிருக்கின்றன. புதுமையான கருப்பொருட்களையும், வெளியீட்டு முறை களையும் கொண்டு விளங்குவதால் இவை நவீன இலக்கியங்கள் என்று அழைக்கப் படுகின்றன. மேலும் பிரச்சாரத் தன்மையை உடைய மக்கள் இலக்கியமாகவும் இக்கால இலக்கியங்கள் திகழ்கின்றன. ஐரோப்பியர் வருகைக்குப் பிறகு உரைநடையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகக் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, விமர்சனம், திறனாய்வு மற்றும் வாழ்க்கை வரலாறு போன்ற இலக்கிய வகைகள் தோன் றியபோதும் கவிதையே நவீன இலக்கியத்தின் அரசியாக விளங்கி வருகின்றது.

91. தற்கால இலக்கியங்களின் புதுமைக்குக் காரணம் யாது?

(A) விடுதலை கிடைத்தமை

(B) இலக்கியப் பரிணாமத்தின் உச்சத்தை எட்டியமை

(C) மாறுதல்களை உள்வாங்கியமை

(D) தமிழ்ச் சமூகச் சூழல்

92. நவீன இலக்கியங்கள் என்று அழைப்பது ஏன்?

(A) புதிய படைப்பாளர்கள் எழுதுவதால்

(B) புதுமையான கருப்பொருள் மற்றும் வெளியீடு

(C) பிரச்சாரத் தன்மை உள்ளதால்

(D) மக்கள் இலக்கியமாதலால்

93. 1. "ஐரோப்பியர் வருகை நாவல், சிறுகதை போன்றவை தோன்றக் காரணமானது"

2. "ஐரோப்பியர் திறனாய்வு, வாழ்க்கை வரலாறு, காப்பியம் போன்றவற்றை அறிமுகம் செய்தனர்- இதில்

(A) இரண்டும் சரி

(B) இரண்டும் தவறு

(C) 1 மட்டும் சரி

(D) 2 மட்டும் சரி

94. கட்டுரை, சிறுகதை, கவிதை, நாவல் இக்குழுவில் தனித்து நிற்பதைச் சுட்டவும்.

(A) கவிதை

(B) கட்டுரை

(C) சிறுகதை

(D) நாவல்

95. இக்கட்டுரையின் உட்பொருள் யாது?

(A) இலக்கியத்தின் பயன்பாடு

(B) இலக்கிய வகைகள்

(C) விடுதலை

(D) இலக்கிய வரலாற்றின் போக்கு

"குரு பக்தி இல்லாத காரணத்தால்
குழப்பங்கள் பள்ளிகளில் குமுறக் கண்டோம்
தருபுத்தி ஆசானைத் தாக்கிப் பேசித்
தமக்கேதோ உரிமையெனத் தருக்கிக்கொண்டு
கருமத்தைக் கல்விதனைக் கருதிடாமல்
கடமை மறந் துரிமைபுகல் கட்சிகட்டும்
சிறுபுத்தி மாணவரைச் சேர்ந்து விட்டால்
சீரழியும் பள்ளிகளின் சிறந்த சேவை

ஓதலினும் மிகச் சிறந்த(து) ஒழுக்கம் என்ற
உண்மைதனை மாணவர்கள் உணர வேண்டும்
மேதினியில் சிறப்படைந்த மேலோ ரெல்லாம்
மேன்மையுற்ற காரணம் நல்லொழுக்கமே தான்
வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்
வெற்றிகளும் நல்லொழுக்கம் விரவினோர்க்கே
ஆதலினால் மாணவர் நல் லொழுக்கந் தன்னை
ஆருயிர்போல் கருதி அதைக் காக்க வேண்டும்.

- நாமக்கல் கவிஞர்

96. இப்பாடலின் உட்கருத்து யாது?

(A) உண்மை உணர்தல்

(B) கடமை மறவாமை

(C) ஓதல் சிறப்பு

(D) ஒழுக்கம் பேணுதல்

97. 'மேதினியில்' என்ற சொல்லின் பொருள்

(A) உலகில்

(B) மேலுலகில்

(C) பள்ளிகளில்

(D) வீடுகளில்

98. மாணவர்கள் உரிமை என நினைத்தது எதை?

(A) ஓதல்

(B) வெற்றி பெறுதல்

(C) ஆசிரியரை எதிர்த்தல்

(D) நட்பு கொள்ளுதல்

99. 1. மிகச்சிறந்தது ஓதல்

2. மிகச் சிறந்தது ஒழுக்கம் - இவற்றில்

(A) 1 மட்டும் சரி

(B) 2 மட்டும் சரி

(C) இரண்டும் சரி

(D) இரண்டும் தவறு

100. பள்ளிகளின் சிறந்த சேவை சீரழியக் காரணம் யாது?

(A) ஆசானை எதிர்த்தல்

(B) கடமை மறத்தல்

(C) சிறுபுத்தி மாணவரைச் சேரல்

(D) இவை அனைத்தும்

101. பின்வரும் கூற்றுக்களில் கேட்டல் திறனுக்குப் பொருந்தும் கூற்று எது?

(A) கொள்வகைத் திறன்களுள் ஒன்று

(B) கொள்வகைத் திறனுக்கு அடிப்படையானது

(C) செயல்வகைத் திறன்களுள் ஒன்று

(D) செயல்வகைத் திறன்களுள் மேன்மையானது

102. "கல்லும் முள்ளும் நிறைந்த இடத்தில் வாழைப்பழம் விழுந்தது" இத்தொடர் எந்தப் பயிற்சிக்குக் கொடுக்கப்படுகிறது.

(A) நா புறழ் பயிற்சி

(B) சொற்களஞ்சியப் பயிற்சி

(C) ஒலித்தல் பயிற்சி

(D) தசைப் பயிற்சி

103. மாணவர்களது அடைவினை அளவிடு வதற்கு பயன்படும் தேர்வு.....

(A) நாட்டச் சோதனை

(B) மரபுத் தேர்வு

(C) தரப்படுத்தப்பட்ட தேர்வு

(D) அடைவுத் தேர்வு

104. "ஓடோடும் சங்கிலி

உருண்டோடும் சங்கிலி

பள்ளத்தைக் கண்டால்

பாய்ந்தோடும் சங்கிலி"

இது ஒரு விடுகதை. இது மாணவனின் எந்த் திறனை வளர்க்க உதவுகிறது?

(A) கேட்டல் திறன்

(B) சிந்திக்கும் திறன்

(C) வாசிப்புத் திறன்

(D) எழுதும் திறன்

105. கற்பத்தலில் கண்டறி முறையைத் தோற்றுவித்தவர் யார்?

(A) எச்.இ. ஆர்ம்ஸ்ட்ராங்கு

(B) ஹெர்பட்ஸ் பென்ஸர்

(C) ஹெலன் பார்க்

(D) ஜோசப் லாண்டன்

106. 'Spiere' என்ற இலத்தீன் வார்த்தையின் பொருள்

(A) கேட்டல்

(B) செய்தல்

(C) பார்த்தல்

(D) தொடுதல்

107. "எழுத்துக்களை நன்கு ஒலிக்கவும் உச்சரிப்புப் பிழைகளைத் திருத்தவும் வாய்ப்பு ஏற்படுகிறது" - இது படித்தல் திறனின் எவ்வகைப் படித்தலை உணர்த்துகிறது.

(A) ஆழ்ந்து படித்தல்

(B) அகன்ற படித்தல்

(C) வாய்விட்டுப் படித்தல்

(D) நூலகப் படித்தல்

108. "குழந்தைமையக் கல்வி" என்பதற்கு எதிரானதாக உள்ளது எது?

(A) விரிவுரை முறை

(B) செயல்திட்டமுறை

(C) உரையாடல் முறை

(D) நடிப்பு முறை

109. 'கல்வி ஏற்பாட்டினை மையமாக வைத்துக் கற்பிப்பது தவறு. குழந்தையை மையமாக வைத்து கற்பிக்க வேண்டும்' என்று கூறியவர்.

(A) பெஸ்டலாஸி

(B) ரூஸோ

(C) ஜான்டூயி

(D) புராபெல்

110. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பன் செல்பவர்" – இப்பாடலை வகுப்பில் வாசிப்புப் பயிற்சி அளித்தபோது கண்பார்வையில் சிரமம் உள்ள ஒரு மாணவன் வாசிப்பதற்குத் திணறினான். அம்மாணவனுக்கு ஆசிரியர் எவ்வாறு உதவுவார்?

(A) மெதுவாகப் படித்துக் காட்டுதல்

(B) வீட்டுக்குச் சென்று படித்து வரக் கூறுதல்

(C) உரக்கப் படித்துக் காட்டுதல்

(D) மீண்டும் மாணவனைப் படிக்கச் செய்தல்

111. சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் யார்?

(A) நல்லூர் நத்தத்தனார்

(B) முடத்தாமக் கண்ணியார்

(C) நக்கீரர்

(D) கடியலூர் உருத்திரங் கண்ணனார்

112. நீல பத்மநாபனுக்கு சாகித்திய அகாதமி விருது பெற்றுத் தந்த நாவல் எது?

(A) உறவுகள்

(B) தேரோடும் வீதி

(C) பள்ளிகொண்டபுரம்

(D) இலையுதிர் காலம்

113. பிழையற்ற வடிவம் எது ?

(A) அவனை கண்டேன்

(B) அவனைக் கண்டேன்

(C) மாடுகள் மேய்ந்தது

(D) மாடு மேய்ந்தன

114. "தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்" என்ற பழமொழியுடன் பொருள் பொருந்தும் பழமொழி யாது?

(A) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

(B) ஒரு கை தட்டினால் ஓசை வருமா

(C) குற்றம் பார்த்தால் சுற்றம் இல்லை

(D) தண்ணி அடித்து தண்ணி விலகுமா?

115. 'இன்ப வெள்ளம்' என்பதன் அணி யாது?

(A) உவமை

(B) உருவகம்

(C) வேற்றுமை

(D) தற்குறிப்பேற்றம்

116. 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலை எழுதியவர் யார்?

(A) ரோபர்ட்டி நொபலி

(B) எல்லீஸ் துரை

(C) கால்டுவெல்

(D) G.U. போப்

117. தமிழக நாட்டுப்புறக் கலைவடிவம் எது?

(A) தெருக்கூத்து

(B) கரகாட்டம்

(C) வில்லுப்பாட்டு

(D) இவை அனைத்தும்

118. தீபாவளிப் பண்டிகை வரும் தமிழ் மாதம்

(A) மார்கழி

(B) தை

(C) ஐப்பசி

(D) பங்குனி

119. இவற்றில் தூயமந்திரம் எது என்று சுட்டுக

(A) வசியம் செய்தல்

(B) சுற்றிப் போடுதல்

(C) செய்வினை செய்தல்

(D) பலியிடுதல்

120. 1. 'பின் நவீனத்துவம் விளிம்பு நிலைப் பற்றிப் பேசுகிறது'

2. "பெண்ணியம் பின் நவீனத்துவம் சார்ந்த தத்துவம்"

(A) இரண்டும் சரி

(B) இரண்டும் தவறு

(C) 1 மட்டும் சரி

(D) 2 மட்டும் சரி

- o 0 o -

6. For answering questions, candidates are advised to follow instruction strictly given in the Question Paper and on the OMR Answer Sheet.

7. **There will be no negative marking.**

8. The candidate must return the Question Booklet and Answer Sheet (OMR Sheet) to the invigilator before leaving the examination centre. However, student must collect carbon/ duplicate copy of attempted OMR Answer Sheet from Invigilator before leaving the examination hall.

   Don't rub, erase, cut, fold or overwrite on the OMR Answer Sheets.

   Cutting or overwriting in any box provided for answering question will be deemed to be an incorrect answer.

INSTRUCTIONS FOR FILLING THE OMR (ANSWER SHEET)

(a) USE ONLY DARK BLUE/BLACK BALL POINT PEN for writing and marking the ovals.

(b) To answer questions, dark only one oval (Ⓐ Ⓑ Ⓒ Ⓓ) with black/dark blue ink, which you consider correct, corresponding to a specific question.

(c) Mark your answer in the appropriate oval against the number corresponding to the question you are answering, e.g. correct way to mark answer 10 (C) is :



(d) The following way of marking should be avoided.



(e) If you darken more than one ovals, your answer will be treated as wrong.

(f) Do not put any stray mark anywhere on the OMR (Answer Sheet) other than marking in the chosen response.

(g) Do not fold, multiple, tear or wrinkle the OMR Answer Sheet.

(h) Don't use backside of OMR Answer Sheet for rough work.

(i) Since the sheet will be processed by a machine, write and mark the ovals in the appropriate space only.

   For rough work, use only the pages marked as rough work in the Question Paper Booklet.

Signature of the Candidate **Signature of the Invigilator**